Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (3-4-66) இதழ் 55

விசுவாவசு பங்குனி 21 துல்ஹஜ் பிறை 11 ஞாயிற்றுக்கிழமை

பாலக்காடு ஆர் வி. ஜி. பீடிகள்
தரத்திலும், மணத்திலும்,
குணத்திலும் சிறந்த ஆர். வி, ஜி.
பீடிகளைக் கேட்டு வாங்கி
உபயோகியுங்கள்.

முக்கிய கவனிப்பு: சிலர் போலி பீடிகளை ஒறிஜினல் ஆர். வி. ஜி. பீடிகள் என விற்பனை செய்கிறார்கள். எங்கள் வான் மூலம் மட்டுமே நாம் ஆர். வி. ஜி. பீடிகளை விநியோகம் செய்கிறோம். ஆதலால் வேறு கார்களிலோ பைசிக்கிள்களிலோ சிலர் விநியோகம் செய்யும் போலி பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

## சிங்கப்பூர் ரஷ்ய ஒப்பந்தம்

சிங்கப்பூர், ஏப். 2

சிங்கப்பூரும், சோவியத் யூனியனும் புதிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன இந்தஒப்பந்தப்படி சிங்கப்பூரிலும், மாஸ்கோவிலும் இருநாடுகளும் வர்த்தகக் காரியாலயங்களைத் திறக்கும். சிங்கப்பூரின் அபிவிருத்தித்திட்டங்களுக்கும் சோவியத்யூனியன் உதவியளிக்கும்

# யாழ் நகர அபிவிருத்தி திட்டங்கள்

## மந்திரியுடன்மேயர்பேசுவார்

## எம்.பி.யின் உதவியையும்நாடுவார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் நகரின் அபிவிருத்தி சம்பந்தமாக தாம் தயாரித்துள்ள சில திட்டங்களைப் பற்றி ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்துடனும் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடனும் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் உதவியையும ஆதரவையும் பெறுவதற்கு யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா திட்டமிட்டுள்ளார்.

ஸ்தலஸ்தாபன அமைச்சரினதும் யாழ்ப்பாணப் பிரதிநிதியினதும் ஒத்துழைப்புடனும், உதவியுடனும்தான் யாழ்ப்பாண நகர்முன்னேற்றமடையமுடியுமென்பது தமது திடமான நம்பிக்கையென்றும் மேயர் துரையப்பா தெரிவித்தார்.

நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு மூன்று மந்திரிகள் தெரிவித்த யோசனைக்கிணங்க யாழ்ப்பாணத்தில் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவருவதற்கு சில

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் டட்லி இன்று லண்டன் சேருவார்

பாரிஸ், ஏப். 3

பிரஞ்சு ஜனாதிபதி டிகாலுக்கும் இலங்கைப்பிரதமர் டட்லி சேனநாயகாவுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை திருப்திகரமான முறையில் அமைந்திருந்தாக உத்தியோகபூர்வமான வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இருநாடுகளுக்குமிடையே ஏற்படக்கூடிய பொருளாதார தொடர்புகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

நேற்றையதினம் பிரதமர் சேனநாயக்கா இங்குள்ள முக்கிய அதிகாரிகளுடன் தமது பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டார்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இன்று இங்கிருந்து லண்டன் போய்ச் சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது

அடுத்தவார முற்பகுதியில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சனைச் சந்தித்து பிரதமர் டட்லி சேனநாயக்கா பேச்சுவார்த்தை நடத்துவார்.

இருநாடுகளுக்குமிடையே ஏற்படக்கூடிய தொடர்புகள் குறித்து, பேச்சுவார்த்தை நடைபெறுமென அறியப்படுகிறது.

## தமிழ் மொழி சட்டவிதிகளை செயற்படுத்த திறைசேரி உத்தரவு

கொழும்பு, சனி

ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ் சட்ட விதிகளை நடைமுறைக்கு கொண்டு வரும்படி திறைசேரிக் காரியதரிசி திரு. எச்.ஜே. சமரக்கொடி நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ் சட்ட விதிகளை செயல்படுத்துவதற்காக திணைக்களங்களில் பல மாற்றங்கள் செய்யப்படுமெனவும், பிரதானமாக உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. குறிக்கப்பட்ட திணைக்களங்களில் உத்தியோகஸ்தர்கள் இல்லாதநிலை ஏற்படுமாயிருந்தால் உதவி திறைசேரி காரியதரிசியின் அனுமதியுடன் வேறு அமைச்சுக்களிலிருந்து உத்தியோகத்தர்கள் திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

தமிழ் மொழி சட்ட விதிகள் செயற்படுத்தப்பட்டால் வடக்கு, கிழக்கு மகாணங்களில் எல்லா அரசாங்க அலுவல்களும், அரசாங்கப் பொதுப் பதிவேடுகளும் தமிழ் மொழியில் நடாத்த வழிவகை செய்யும்.

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராதிகார சபைகளுடனும் உத்தியோகத்தர் என்ற முறையில் செயலாற்றும் எந்த உத்தியோகத்தருடனும் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ள இவ்விதிகள் வழிவகை செய்யும்.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

## அமெரிக்க மக்களை வெகுவாக கவர்ந்துவிட்டார்

நியுயோர்க், ஏப். 2

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி அமெரிக்கமக்களின் மனதை வெகுவாகக் கவர்ந்து விட்டாரென்று நியுயோர்க் ஹரால்டு என்ற பத்திரிகை விமர்சனம் செய்துள்ளது.

## சீனவுடன் சட்டவிரோதஒப்பந்தம் சுபந்திரியோ செய்துகொண்டாராம்

கோலாலம்பூர், ஏப் 2

இந்தோனேஷியாவின் முன்னாள் வெளிநாட்டு மந்திரி திரு. சுபந்திரியோ பதவியிலிருக்கும் போது கம்யூனிஸ்ட் சீனவுடன் சட்ட விரோதமான ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டார் என்று ஜகார்த்தாவில் இருந்து வெளியாகும் பத்திரிகை செய்தியொன்று கூறுகின்றது.

இந்தோனேஷியாவை சீனவின் ஆதிக்கத்துக்குள்ளாக்கும் நோக்கத்துடன் செய்து கொண்ட [illegible] வின் சார்பில் சீன மந்திரி சென் ஈ கைச்சாத்திட்டிருப்பதாக அச்செய்தி கூறுகின்றது

குற்றங்களைத் தடுப்பதில்

## பொலிஸாருடன் ஒத்துழைக்குமாறு பொதுமக்களுக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

''டைனமைட்'' வெடி வைத்து மீன்களைப்பிடிப்பதைத் தடைசெய்வதில் யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். டைனமைட் வெடி வைத்துப் பிடித்ததாகக் கருதப்படும் மூன்றுகடல்பன்றிகளை யாழ்ப்பாணம்பொலிஸ் கோஷ்டியொன்று நேற்று கைப்பற்றியுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து யாழ். பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எச். சி. பெரேராவும் குற்றத்தடுப்புப் பகுதியைச் சேர்ந்த சார்ஜன்ட் இக்னேஷியஸும் நேற்றுக் காலை கரையூருக்குச்சென்று 'டைனமைட்' வெடி வைத்துப் பிடித்தமூன்று கடல் பன்றிகளைக் கைப்பற்றினர்.

இவற்றைப் பரிசோதனை செய்த யாழ்ப்பாணம்வைத்திய அதிகாரி 'டைனமைட்' வெடிவைத்துப் பிடிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். இது சம்பந்தமாக கரையூரைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் திரு. எம். சௌந்தரநாயகம் பொதுமக்களுக்கு விடுத்த ஒரு செய்தியில்; பலவிதமான குற்றச் செயல்களிலும் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிஸாருடன் ஒத்துழைக்குமாறு கோரியுள்ளார். (ந. நி.)

## 21-ந் திகதி பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கூடுகிறது

லண்டன், ஏப்ரல் 2

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் இம்மாதம் 21-ந் திகதி கூடுகிறது. புதிய பார்லிமெண்டின் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து எலிஸபெத் மகாராணியார் சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

மீண்டும் ஆட்சிக்குவந்துள்ள தொழிற் கட்சியின் தலைவர் திரு. வில்சன் தமது அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

திரு. வில்சன் தமது இப்போதைய மந்திரி சபையில் சில மாற்றங்களைச் செய்ய புதிய மந்திரிசபையை அமைப்பாரெனத் தெரிகிறது இதே சமயம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹீத்தும் தமது முக்கிய பேச்சாளர்களில் சில மாறுதல்களைச் செய்யவிருப்பதாக அறியப்படுகிறது.

---

கொழும்பு, சனி

இ. போ. ச. ஊழியர்களுக்கென விளையாட்டு மைதானம் ஒன்று நாரம்பிட்டியில் விரைவில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றது. இதற்கு 5 லட்சம் ரூபாய் வரை செலவாகலாம் என்று கருதப்படுகின்றது.



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிரகிருதி அழியுந் தன்மையது; இறைவர் மரணமற்றவர், அழியாதவர்; ஒரே கடவுளாகிய அவர் அழியும் பிரகிருதியையும் தனி ஆத்மாக்களையும் அடக்கியாள்கிறார். அவரைத்தியானிப்பதாலும், அவரோடு சேர்வதாலும், தத்துவ பாவனையாலும் இறுதியிலே மாயையின் ஒழிவு ஏற்படுகிறது.

— ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 387

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு பங்குனி மீ 21 உ (3-4-66)

# இந்தியருக்குப் புனர்வாழ்வு

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்களை இந்திய அரசாங்கம் எடுத்து வருவதாகச் செய்திகள் வெளிவந்ததைத்தொடர்ந்து, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான், இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் சிலநல்ல யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார். தாயகம் திரும்பும் மக்களுக்கு மட்டுமல்லாது இந்திய அரசாங்கத்துக்கும் பயன் அளிக்கக் கூடிய இந்த யோசனைகளை இந்திய அரசாங்கம் பரிசிலனை செய்யுமென எதிர்பார்க்கலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அதற்கு அகதிகள் பிரச்னை அதிகம். வெளிநாடுகளிலிருந்து அகதிகளாக வந்துள்ள இந்தியர்கள் மட்டுமல்லாது திபேத்திலிருந்து வந்துள்ள அகதிகளுக்கும் புனர்வாழ்வு அளிக்கும் பெரும் பிரச்னை இந்திய அரசாங்கத்தின் மீது விழுந்துள்ளது. பர்மாவிலிருந்து அகதிகளாக வந்துள்ள இந்தியர் பெரும்பாலும் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள். 'திரைகடலோடியும் திரவியந் தேடச் சென்ற' இவர்கள் உழைத்த உழைப்பெல்லாவற்றையும் விட்டு அகதிகளாகத் தாய்நாடு திரும்பி படும் அல்லல் கொஞ்சமல்ல. இவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காக இந்திய மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் பெரும் முயற்சி செய்கின்றன. இலங்கையிலிருந்து தாயகம் செல்லவிருப்பவர்கள், பர்மா இந்தியர்களைப் போன்று, அகதிகளாகப் போய்ச் சேரமாட்டார்களென்பதே நம்பிக்கை. இவர்கள் தங்கள் தேட்டங்களைக் கொண்டு செல்வதற்கு அனுமதி யளிக்கப்பட்டாலும்கூட, இலங்கையில் அவர்கள் வாழ்ந்த காலம் முழுக்க நாட்டின் வளத்துக்கும் அந்நியருக்கும் உழைத்துக் கொடுத்ததைத் தவிர தமக்கென தேடி வைத்தது அதிகமில்லை. அவர்களது வாழ்க்கை அப்படித்தான் அமைந்திருந்தது. எனவே அவர்கள் அகதிகளாகச் செல்ல வேண்டி நேரிடாவிட்டாலும் தாயகம் சென்றதும் பிறர் உதவியின்றி வாழக்கூடிய நிலை ஏற்பட இடமில்லை. இந்நிலையில் அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டேயாக வேண்டும்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பவிருக்கும் இந்தியர் பலரும், இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, ரப்பர் தோட்டங்களிலேயே உழைத்தவர்களாதலால், தென்னாட்டில் நீலகிரி, கொடைக்கானல், உதகமண்டலம் போன்ற பகுதிகளில், புதிய நிலங்களில் தேயிலை, ரப்பர் செய்கைகளுக்கு ஏற்பாடு செய்தால் இந்திய நாட்டுக்கும் இலங்கையிலிருந்து செல்பவர்களுக்கும் பெரும் பலன் கிடைக்கும். திரு. தொண்டமான் தெரிவித்துள்ள இந்த யோசனையை தமிழ்நாட்டு அரசாங்கமும் கவனத்தில் கொள்வது நல்லது.

# தொழில் நுட்பக் கல்வி

இலங்கையின் தொழில் வளர்ச்சிக்கும் இலங்கையின் தேவைக்கும் ஏற்ப பொறியியல், தொழில் நுட்பத் துறைகளில் பயிற்சி அளிப்பதற்கான திட்டங்களின்கீழ் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியை விஸ்தரித்து உரிய சாதனங்களை அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பமாகிவிட்டதாகவும் இது ஐ. நா. அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் நடைபெறுகிறதென்றும் செய்திகள் கூறுகின்றன. இது நம்பிக்கையும் சற்று ஆறுதலுமளிக்கக் கூடியதாகும்.

நாட்டுக்குத் தேவையான தொழில் நுட்ப வல்லுனர்களைப் பொறியியல் நிபுணர்களையும் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை பலரும் பல தடவைகளிலும் வற்புறுத்தி வந்தபோதிலும் நாட்டின் கல்வித்திட்டம் சீரமைக்கப்படாததால் இந்த யோசனைகள் கொள்ளப்படவில்லை. கல்விமுறை நாட்டின் அபிவிருத்திக்கேற்ப அமைந்திருக்கவேண்டும். இதை அடிப்படையாகவைத்தே நாட்டின் கல்விமுறையில் திருத்தம்செய்து நாட்டுக்கேற்ற தொழில் கல்வியுடன் இணைந்த தேசியக் கல்வித்திட்டம் கொண்டுவரவேண்டுமென பலர் வற்புறுத்தி வந்தனர். இந்த நோக்கத்துடன்தான் புதிய தேசிய கல்வித்திட்டம் கொண்டுவரப்போவதாக இன்றைய கல்விமந்திரியும் இதற்கு முன்னிருந்த கல்வி மந்திரிகளும் தெரிவித்தனர்.

கல்விமுறையைச்சீரமைப்பது ஒரு புறமிருக்க தொழில் நுட்ப, பொறியியல் துறைகளுக்கு ஊக்கமளித்து அவைகளில் நமது இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டியது அவசியம். இப்பொழுது கொழும்பில் தொழில் நுட்ப பயிற்சிக் கல்லூரியொன்று இருக்கிறது. இது நாட்டின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இல்லை. இக்கல்லூரியை விஸ்தரித்தாலும், உபகரணங்கள், சாதனங்கள் அமைக்கப்பட்டாலும் கூட இன்றைய நிலையில் நமது தேவையை முழுவதுமாகப் பூர்த்தி செய்யமுடியுமென எதிர்பார்க்க முடியாது. எனவே நாட்டின் இதர பகுதிகளில் தொழில் நுட்பக் கல்லூரிகளையும், கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிகளை அமைக்க வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியை பூரண வசதியுள்ள தொழில நுட்பக் கல்லூரியாக்குவதென கல்வி மந்திரி அளித்த வாக்குறுதியையும் காலதாமதமின்றி நிறைவேற்றுவது [illegible]கும்.

## ஆசிரியருக்குக் கடிதம்

# மந்திரி கவனிப்பாரா?

இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் முக்கியமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல உள்ளூர் ஆட்சி ஸ்தாபனங்களில் மிகச் சிலவே சுமுகமாக இயங்கிவருகின்றன. மற்றவை சீர்கெட்ட நிலையில் இருப்பதற்கு முக்கிய காரணம் அங்கத்தவர்களாக உள்ளவர்களின் பொதுச்சேவை நோக்கமற்ற சுயநலமே யாகும். சில உள்ளூராட்சி ஸ்தாபனங்கள், மாதக்கணக்காக, வருடக்கணக்காக மக்களுக்கு ஒருவித சேவையும் செய்யாமல் சில அங்கத்தவர்களின் சுயநலப் போக்கினால் பாதிக்கப்பட்டிருந்தும் இந்நிலைமையைச் சீர்ப்படுத்த சட்டப்படி தத்துவமுடைய கௌரவ உள்ளூராட்சிமந்திரி இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருப்பது கவலையளிக்கிறது. உதாரணமாக ஏறக்குறைய 20,000, 30,000 மக்களை அடக்கியுள்ள இரு உள்ளூராட்சி ஸ்தாபனங்கள் (கட்டைவேலி கிராமசபையும், நெல்லியடி பட்டின சபையும்) பல மாதங்களாக மக்களுக்குச் செய்ய வேண்டியசேவைகளை கவனியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமையை கௌரவ உள்ளூராட்சி மந்திரி அறிந்திருந்தும் ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்காதிருப்பது விசனத்துக்குரியது இவ்விஷயத்தை உடனடியாகக் மந்திரி கவனிப்பாரா?

வே. பாலச்சந்திரன், நெல்லியடி.

# பண்டிதர் சங்கம் பேட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை பண்டிதர் சங்கம் புலவர்மன்றம், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் வாணி கலைக்கழகம் முதலியவற்றின் பிரதிநிதிகள் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை பேட்டிகண்டு தங்கள் பிரச்னைகளை விளக்கினர். வேலையற்றிருக்கும் பண்டிதர், புலவர்களுக்கு உடனடியாக வேலை வழங்க ஏற்பாடு செய்வதாக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் உறுதியளித்தார்.

இப் பேட்டியின்போது பண்டிதர் க. வீரகத்தி, புலவர் மு. கணபதிப்பிள்ளை, பண்டிதர் செ. துரைசிங்கம், பண்டிதர் சி. பொன்னுத்துரைமுதலியோர் சமுகமளித்தனர்.

# தண்ணீர்திட்டம் பற்றி மந்திரி மஜீத்

சென்னை, ஏப். 2

நாடு முழுவதிலும் கிராம பகுதிகளில் தண்ணீர் கஷ்டம்ஏற்பட்டுள்ள பிரதேசம் அனைத்துக்கும் குடிதண்ணீர் வசதியளிக்கப் பெரிய திட்டத்தை மத்திய அரசாங்கம் விரைவில் தயாரிக்குமென்றும், ராஜ்யங்களில் அதிகாரிகள் பல்வேறு இடங்களில் பரிசிலனைசெய்ததைத்தொடர்ந்து ராஜ்ய அரசாங்கங்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை ஆதாரமாகக்கொண்டு மத்திய அரசாங்கம் தனது திட்டத்தைத் தயாரிக்கும் என்றும் இன்று அசெம்பிளியில் ஸ்தலஸ்தாபன மந்திரி ஸ்ரீமஜீத் கூறினார்.

# 'இசைக்கலை வளர்ச்சியே எமது நோக்கம்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

இசைக்கலை வளர்ச்சியையே தன் நோக்கமாகக் கொண்டு 61-ம் வருடத்தில் ஆரம்பமாகிய கலைக்கழகம் அன்று தொடக்கம் ஒரு சங்கீதக் கலாசாலையை யாழ். மத்திய கல்லூரியில் நடாத்திவருகிறதென்றும், அதில் இன்று 45 மாணவர்களுக்கு மேல் இசைபயின்று வருகின்றனர் எனவும் சென்ற ஆவணி மாதம் நடைபெற்ற வட இலங்கைச் சங்கீதசபையாரின் சங்கீதப் பரீட்சைகளுக்கு மேற்படி கலாசாலை மூலம் தோற்றிய மாணவர்களனைவரும் சித்தியெய்தியுள்ளார்கள் எனவும், இவ்வித நோக்கத்தில் மேலும் முன்னேறுவதற்குக் கலாசாலை பற்றிப் பலர் அறியக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றும், வண்ணை ஸ்ரீவெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் கோவிலில் நடைபெற்ற யாழ்ப்பாணம் கலைக்கழகத்தின் பொதுக்கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசிய திரு. து. சீனிவாசகம் கூறினார்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

கலைக்கழகம் என்னும் சங்கீதத்தின் 'பெயரை' நுண்கலைக்கழகம் என மாற்றி அமைப்பது.

வருகிற வைகாசி மாதத்தில் சங்கத்தின் சார்பில் ஓர் இசைவிழாவை நடத்துவது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் திரு. என். சபாலிங்கம், தலைவர் திரு. து. சீனிவாசகம், உபதலைவர்கள் திருவாளர்கள் எஸ். இராசநாயகம், என். எஸ். இரத்தினசிங்கம், கௌரவ பொதுச்செயலாளர்: திரு. பி. காசிலிங்கம், கௌரவ உதவிப்பொதுச் செயலாளர் திரு. ஆர். லோகநாதன். தனாதிகாரி திரு. எஸ். எஸ். வேலுப்பிள்ளை, உபதனாதிகாரி திரு. கே. சுப்பிரமணியம்.

மற்றும் நிர்வாகசபை அங்கத்தவர்களாக திருவாளர்கள் ஏ ரங்கசாமி, கே ஆர் நடராசன், என் சின்னத்துரை, கே வேதாசலம், ரீ ஆறுமுகம், எம் பொன்னுத்துரை, ரீ சந்தானகோபால், வி பரமலிங்கம், மா ஐயன்னா என் மாரிமுத்து, கே கதிரவேலு, கே கிருஷ்ணபிள்ளை ஆகியோர்களும், கணக்குப் பரிசோதகராக திரு கே கிருஷ்ணசாமியும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

# தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று ஈழத்துச்சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோவிலில் இரதோற்சவம் நடைபெறும். பிற்பகல் 2-30 க்குச் சுவாமி தேர்மீது பவனிவருவார். நாளை தீர்த்தோற்சவமும் பிற்பகல் திருக்கல்யாணமும் இடம்பெறும்.

# நாடும் நடப்பும்

பாக்குநீரிணையை நீந்திக் கடக்க இந்திய நீச்சல்வீரர் மிகிர்சென் எல்லா ஏற்பாடுகளையும் செய் திருந்தார். இன்று அவர் தலைமன்னாரிலிருந்து நீந்தப் புறப்படுவதாக இருந்தது. ஆனால் திடீரென தமது முயற்சியை அவர் ஒத்திவைத்துள்ளாராம். எனினும் சில தினங்களுக்குள் அவர் இந்த முயற்சியை மேற்கொள்வார்.

ஃ ஃ ஃ

பாக்குநீரிணையை முதன் முதலில் நமது நவரத்தினசாமி நீந்திக் கடந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். புகழும் ஈட்டினார். இலங்கைக்கு விஜயம்செய்த எலிஸபெத் மகாராணிக்கு அவர் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பொழுது, மகாராணியார் அவருடன் கைகுலுக்கி, பாராட்டும் தெரிவித்தார். என்ன காரணமோ நவரத்தினசாமியுடன் மகாராணியார் கைகுலுக்கியபோது புகைப் படம் எடுக்க அனுமதிக்கப் படவில்லையாம்!

ஃ ஃ ஃ

பின்னர் எஸ். ஸி. ஆனந்தன் என்ற நமது இளைஞர் ஒருவரும் பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியை மேற்கொண்டார். அவர் நீந்திக் கடந்தது உண்மைதானா என்று வாதப் பிரதிவாதங்கள்கூட நடைபெற்றது. சரியான ஏற்பாடுகள் செய்யாவிட்டால் இந்தவித வாதப் பிரதிவாதங்களுக்கு இடமேற்படத்தான் செய்யும். இந்திய வீரர் மிகிர்சென் செய்துள்ள ஏற்பாடுகள் இனிமேல் இவ்வித முயற்சிகளை மேற்கொள்ள விரும்பும் நமது இளைஞர்களுக்கு வழி காட்டக் கூடியதாக உள்ளது.

ஃ ஃ ஃ

மிகிர்சென் நீந்தத் தொடங்கியதும் அவருக்குச் சிறிது தூரத்தில் 'சாரதா' 'சுகன்யா' என்ற இரு சிறிய கப்பல்கள் சென்றுகொண்டிருக்கும். நீச்சல்வீரருக்கும் மற்றையோருக்கும் உற்சாகமூட்டக்கூடிய இசை விருந்தும் இக்கப்பல்களில் நடைபெறும். இதன்மூலம் பெரும் சுறாக்களின் ஆபத்தையும் தவிர்க்கலாமென்பது நம்பிக்கை. கப்பல்கள் தவிர நீச்சல்வீரரின் இருமருங்கிலும் இருபடகுகள் செல்லும். முன்னும் பின்னும் மற்றுமிரு படகுகள் செல்லும். இந்தப் படகுகள் தவிர முன்னே மற்றும் ஆறு இயந்திரப் படகுகள் செல்லும். இயந்திரப் படகுகளில் நான்கு படகுகளையும் வலிப்பதற்கான ஆட்கள் இருப்பார்கள்.

இப்படிப் பல ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு அரசாங்கமும் மற்றையோரும் ஊக்கமும் உதவியுமளிப்பதுதான் இதற்கெல்லாம் முக்கிய காரணமாகும்.

நமது இளைஞர்களில் நீச்சல் திறமையும் ஆர்வமும் உள்ள பலருள்ளனர். அவர்களுக்கு ஊக்கமும் உதவியுமளிக்க வேண்டும். அரசாங்கம் அளிக்குமா?

—ஊர்சுற்றி

# நிர்வாகிகள்

அச்சுவேலி, சனி

அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியின் உயர் வகுப்பு மன்றம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எஸ் தம்பிராசா, செயலாளர்: திரு பி சூடாமணி, பொருளாளர்: திரு எஸ் ஆனந்தவடிவேல், போஷகர் ஆசிரியர் திரு இ சங்கரப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோகசபை நடவடிக்கைகள் முதல் தடவையாக ஒத்திவைப்பு

## பஸ்தார் பிரேரணையின் எதிரொலி

புதுடில்லி, ஏப்ரல் 2

16 வருட வரலாற்றில் லோகசபை நடவடிக்கைகள் முதல் தடவையாக ஒத்திவைக்கப்பட்டது. அத்துடன் சபையை விட்டு மூன்று அங்கத்தவர்களை வெளியேறும்படி சபாநாயகர் உத்தரவிட்டார். இந்த மூன்று அங்கத்தவர்களையும் இருவாரத்துக்கு சபையில் அனுமதிப்பதில்லையெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பஸ்தாரில் நடந்த சம்பவங்கள் பற்றிய அவசரப் பிரேரணைக்கு லோகசபையில் சபாநாயகர் அனுமதி மறுத்ததார், ஒரே கூச்சலும் அமளியும் இடம்பெற்றது. இதைத்தொடர்ந்து சபை அலுவல்கள் 75 நிமிடங்களுக்கு முன்னதாகவே ஒத்திவைக்கப்பட்டன.

சபாநாயகர் அளித்துள்ள தீர்ப்பிலுல் என்ன நடந்த போதிலும், சபை நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்க நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்று ஸ்ரீ ஆர். எஸ். யாதவ், ஸ்ரீ கிஷண் பட்நாயக், ஸ்ரீ மது விமாயி ஆகிய மூன்று சம்யுக்த சோஷலிஸ்ட் அங்கத்தவர்கள் அறிவித்தனர்.

15 நிமிட நேரம் அவர்கள் கூச்சல்போட்டு, முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட கோரிக்கையின் மீது விவாதம் ஆரம்பிக்க அனுமதிக்கவில்லை.

சபாநாயகர் மிகவும் பொறுமையாக நடந்துகொண்டார். சபையை விட்டு வெளியேறி, சபையின் கண்ணியத்தை நிலைநிறுத்தும்படி அங்கத்தவர்களை அடிக்கடி கேட்டுக்கொண்டார். சபையின் கண்ணியத்தைக் குலைக்காதீர்கள் என்றும் கேட்டுக்கொண்டார்

இதனைத் தொடர்ந்து, சபாநாயகர் தமது முயற்சிகள் பயனளிக்காமல் போகவே, சபையைவிட்டு வெளியேறும்படி மூன்று அங்கத்தவர்களுக்கு உத்தரவிட்டார். இருவாரத்துக்கு இந்த மூன்று அங்கத்தவர்களையும் சபைக்கு வராது நிறுத்திவைக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

பஸ்தார் சம்பவங்கள் குறித்து உள்துறை மந்திரி திரு. நந்தா ஒரு அறிக்கை வெளியிட்டார்.

பஸ்தார் சம்பவங்கள் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதி பாரபட்சமற்ற முறையில் நடந்துகொள்வாரா என்று மாசு கற்பிக்கும்வகையில் சில அங்கத்தவர்கள் பேசியிருப்பது பற்றி உள்துறை மந்திரி திரு. நந்தா வருத்தம் தெரிவித்தார்.

## இந்திராவுக்கு ஜோன்சன் காட்டிய பரிவு!

வாஷிங்டன், ஏப். 2

ஜனாதிபதி ஜோன்ஸன் வழக்கமான சம்பிரதாயத்தை மீறி இந்தியத் தூதரின் விருந்தில் கலந்து கொண்டார்.

இந்திய தூதரகத்தில் பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு அளித்த வரவேற்புக்கு ஜோன்ஸன் வந்திருந்தார். அவரது திட்டப்படி வரவேற்பில் அரை மணிநேரம் தங்கிவிட்டு பின்னர் சென்று விடவேண்டும். வரவேற்பைத் தொடர்ந்து விருந்து ஒன்றை இந்தியத் தூதர் ஸ்ரீ பி. கே. நேரு அளித்தார். இவ்வித விருந்தில் உதவி ஜனாதிபதி ஹம்ப்ரி பிரதம அமெரிக்க விருந்தினராக இருப்பது உண்டு.

வரவேற்பின் போது ஸ்ரீமதி காந்தியுடன் சில நிமிடநேரங்கள் வரை உரையாடிக்கொண்டிருந்த ஜோன்ஸன், விருந்துக்கும் தங்குமாறு ஸ்ரீமதி இந்திரா விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்தியத் தூதரின் மனைவி ஸ்ரீமதி நேரு அவசர அவசரமாக விருந்தினருக்கான இடங்களை மாற்றியமைத்தார். ஜோன்ஸன் தங்கியிருந்து விருந்தில் கலந்து கொண்டார். சாதாரண பிற நாட்டு அதிபர்களுக்கு தூதர்கள் அளிக்கும் விருந்துகளில் ஜோன்ஸன் கலந்து கொள்வதில்லை.

## பேய் மழைக்கு 70 பேர் பலி!

ரியோடிஜெனிரோ, ஏப். 2

சென்றவாரக் கடைசியில் ரியோடிஜெனிரோவிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள பெட்ரோ-யோலிஸ் என்ற இடத்தில் பெய்தபேய்மழைக்கு 70 பேர் பலியானுர்கள். 100பேர் காயமடைந்தனர். ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

## பஸ்தார் மன்னர் கொலை நடந்தது பற்றி சகோதரர் கூறுகிருர்

ஜகதல்பூர், ஏப். 2

ஆதிவாசிகளை சமாதானப் படுத்துமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பஸ்தார் மாஜி மன்னர் பிரவீண் சந்திர பான்ஜிதேவ் தமது மாளிகையில் தமது அறையிலிருந்து வெளியே வந்தபோது கொல்லப்பட்டதாக பஸ்தார் மன்னர் விஜய சந்திர பான்ஜிதேவ் இங்கு கூறினுர்.

ஜெய்ப்பூரைச்சேர்ந்தநிருபர்கள் மத்தியில் பேசுகைகையிலேயே மேற்கண்டவாறு சொன்னுர்.

பொலிஸ் சுட்டதில் தமது சகோதரர் மரணம் அடைந்தது குறித்து மார்ச் 26 காலைவரை தெரிவிக்கப்படவில்லையென்றும், மாளிகை வேலைக்காரி மூலமாகவே தமக்குத் தகவல் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## காங்கிரஸ் தேர்தல் நிதி

### காமராஜர் விவாதிப்பார்

புதுடில்லி, ஏப். 2

பொதுத்தேர்தலுக்கு பாமர மக்களிடமிருந்து எவ்வளவு நிதி திரட்டுவது என்பது குறித்து ராஜ்ய முதன் மந்திரிகளுடனும், பிரதேச காங்கிரஸ் தலைவர்களுடனும் காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ காமராஜர் விரைவில் விவாதிக்க உத்தேசித்திருக்கிருர். கட்சி தேர்தல் நிதிக்காக இப்போதிருந்தே சிறு நன்கொடைகள் வசூலிக்க அதிகபட்ச முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று காமராஜர் கருதுகிருர்.

இந்தியா முழுவதிலும் தீவிரமுயற்சிகள் மேற்கொண்டால் சிறு நன்கொடைகளின்மூலம்தேவையான நிதியை காங்கிரஸ் கட்சி பெற[illegible] திருப்[illegible] ஸ்ரீ காமராஜர் தெரிவித்துள்ளார்.

ஒரிஸ்ஸாவில்

## பட்டினியால் சாகிருர்கள்!

புதுடில்லி, ஏப். 2

சென்ற இரண்டு வாரங்களுக்குள் ஒரிஸ்ஸாவில் பஞ்சாப் பிரதேசம் என்று அறிவிக்கப்பட்டுள்ள ஒரு கிராமத்தில் ஒன்பது குழந்தைகள் பட்டினியால் இறந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு மந்திரி திரு. ஸி. சுப்ரமணியம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஒரிஸ்ஸாவில் ஜனங்கள் பட்டினியால் வீதிகளிலே சாகிருர்களென்று ஒரிஸ்ஸா அங்கத்தவர் ஸ்ரீ கிஷன் பட்நாயக் தெரிவித்தார்.

சென்னை

## சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு வரிவிலக்கு

சென்னை, ஏப். 2

கார்ப்பரேஷன் கூட்டத்தில் இன்று 1966-67-ம் ஆண்டுக்கான பட்ஜட் நிறைவேறியது.

சைக்கிள் ரிக்ஷாக்கள், 1 டன் எடைக்கும் குறைவாக உள்ள டயர்களுடன் கூடிய வண்டிகள், தனியார் உபயோகிக்கும் 1 டன்எடையுள்ள டிராலிகள், டிரக்குகள் ஆகியவற்றிற்கு வரியிலிருந்து விலக்கு அளிப்பதென்று கார்ப்பரேஷன் கவுன்ஸில் முடிவு செய்துள்ளது.

## கம்யூனிஸ்ட் மகாநாடு

### சீனு மீது கண்டனம்

மாஸ்கோ, ஏப். 2

ஹங்கேரியும் செக்கோஸ்லோவேகியாவும் இன்று சீனுவைக் கண்டிப்பதில் ரஷ்யாவுடன் சேர்ந்துகொண்டன. ஆனுல் இந்தத் தகராறில் பட்டுக்கொள்ளாமல் ருமேனியா இருந்துவிட்டது. சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியின் மகாநாட்டின் மூன்ருவது தின நிகழ்ச்சிகளின் போது இந்த மூன்று நாடுகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் பேசினுர்கள்,

செக்கோஸ்லோவேகியா பிரதிநிதி அதிபர் அன்டோனின் நொவொட்னி பேசிய போது, சீனுவைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கூட்டு நடவடிக்கை எடுக்க ஒத்துழைக்கமறுப்பது முற்ருகச் சரியில்லையென்று குறிப்பிட்டார்.

ருமேனியப்பிரதிநிதி திரு. நிக்கோலே காஸ்கு பேசும்போது, கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவு விரிவுபடாமல் தடுப்பதற்கு காலம் இன்னும் கடந்துவிடவில்லையென்ருர்.

ரஷ்ய கோஷ்டிக்குள் ருமேனியாவை இன்னும் நெருக்கமாக இழுத்துக்கொள்ள ரஷ்யா செய்த முயற்சிகளை ருமேனியா தவிர்த்துக்கொண்டுள்ளது,

## பீகிங் பத்திரிகையின் கருத்து

பீகிங், ஏப். 2

"இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அமெரிக்காவில் தங்கியிருந்த சமயம் சீனுவை பலமாகக் கண்டித்துள்ளார். சிலசமயம் மேலதிக உதவி அமெரிக்காவிடமிருந்து பெறலாம் என இப்படி இந்திரா கூறியிருக்கலாம்" என பீகிங்கில் வெளியான பத்திரிகையொன்றின் தலைப்புச்செய்தியில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

# தனிமை வாழ்வை விரும்பும் இந்தியப் பிரதமர் இந்திரா!

லண்டன், ஏப்ரல் 2

"நான் மறுமணம் செய்துகொள்ள விரும்புவதாகச் சொல்லவில்லை. அமைதிமிக்க, தனிமைமிக்க வாழ்க்கை நடத்தவே விரும்புகின்றேன். அத்தகைய வாழ்க்கையை நடத்தமுடியுமென்று எண்ணுகிறேன். ஆனுல் இந்த வாழ்க்கை எனக்கு விரைவில் சலிப்பைக் கொடுக்கக்கூடும்."

லண்டன் 'டெயிலிமிரர்' பத்திரிகைக்கு அளித்த ரசமான பேட்டியொன்றில்இந்தியப்பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி இப்படியாகத் தெரிவித்துள்ளார்.

அப்பத்திரிகையின் விசேஷ நிருபர் ஸ்ரீமதி பாவ்லா ஜேம்ஸ் ஸ்ரீமதி இந்திராகாந்தியைப் பேட்டிகண்டு எழுதியுள்ளார்.

"ஸ்ரீமதிஇந்திராகாந்திக்கு 48 வயதாகிறது. அவர் ஒரு விதவை. அதிலும் அவர் தனிமையாக வாழும் விதவை.

ஸ்ரீமதி இந்திரா காந்தி தனது தந்தை பண்டிதர் நேருவைத் தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தார். அந்த அருமைத் தந்தையும் இறந்துவிட்டார். வருடங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன" என்று அப்பேட்டியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

'டெயிலிமிரர்' பத்திரிகையில் வெளியாகியுள்ள இந்தப பேட்டி கவரக்கூடிய விதத்தில் எழுதப்பட்டுள்ளது.

"ஸ்ரீமதி இந்திராகாந்தியின் இருபுதல்தர்களும் இங்கிலாந்தில் படிக்கின்றனர். ஒவ்வொருநாளும் வேலைமுடிந்து இரவில் வீட்டுக்குத் திரும்புகையில் ஸ்ரீமதி இந்திரா காந்தியை வரவேற்பதற்காக யாருமே இருக்க மாட்டார்கள். 3 நாய்கள் மட்டும் அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன. பிரதமர் இந்திராகாந்தியைப் பேட்டிகண்டேன். சாதாரண குடும்பப் பெண்ணுக வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருப்பதை அறியக்கூடியதாக இருக்கிறது" என்று இந்திராவைப்பேட்டி கண்டநிருபர்ஸ்ரீமதிபாவ்லா ஜேம்ஸ் தெரிவித்துள்ளார்.

"இந்தியப்பிரதமர்ஸ்ரீமதி இந்திராகாந்திக்கு தனிமை மற்ருேர் பெரிய சுமை" என்ற தலைப்புடன்தான் அந்தப்பேட்டி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

"நான் பார்க்கும் வேலை எனக்குப் பெரியசுமைதான். எனதுகுழந்தைகளில் யாரும் இந்தச் சுமையை மேற்கொள்வதை நான் விரும்ப மாட்டேன். என்னைப்பொறுத்தவரையில் என் சுமையைப்பற்றி நான் ஒன்றும் கவலைப்படவில்லை. இந்தியாவுக்கு எல்லாம் நன்மையாக முடிந்தால் பெருமிதமடைவேன்" என்று அப்பேட்டியில் இந்திரா குறிப்பிட்டுள்ளார்.

## திருவள்ளுவர் மறைவுதினம்

### விடுமுறைத்தினமாகியது

சென்னை, ஏப். 2

திருவள்ளுவர்மறைவு தினத்தை விடுமுறைத்தினமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது,

இவ்வருடம் ஜூன் 2-ந் திகதி திருவள்ளுவர் மறைவுதினம் விடுமுறைத்தினமாக இருக்குமென்றும் அதற்குப்பதிலாக ஏற்கனவே விடுமுறைத்தினமாகக்கணிக்கப்பட்ட ஜூன் 11 விடுமுறைத்தினமாக இருக்கமாட்டாதென்றும் அறிவிக்கப்பட்டது. இத்தகவலை முதன்மந்திரி இன்று அசெம்பிளியில் தெரிவித்தார்.

## நிஜாமுக்கு ரூ. 7 லட்சம்

### மின்சாரக் கட்டண பாக்கி

ஹைதராபாத், ஏப் 2

மின்சாரக் கட்டணம் கொடுக்காமல் அதிக தொகை பாக்கி வைத்திருப்பவர்கள்பட்டியலில் ஹைதராபாத் நிஜாமின் பெயர் தான் முதலில் இருக்கிறது. அவர் கொடுக்காமல் பாக்கி வைத்திருக்கும் தொகை ரூபா 7 லட்சமாகும்.

## "மிளகாய் செய்கையில் ஈடுபடுங்கள்"

### விவசாயிகளுக்கு காரியாதிகாரி யோசனை

திருகோணமலை, சனி

சாம்பல் தீவில் ஒருநெசவு நிலையம் நிறுவுவது பற்றி ஆராய்வதற்காக ஒரு பொதுக் கூட்டம் திருகோணமலை காரியாதிகாரி திரு. ஜே. டீ. ஆர்னேலட் தலைமையில் நடைபெற்றது.

திரு ஜே. டீ. ஆர்னேல்ட் பேசுகையில், "ஒரு நெசவு நிலயத்தை இந்தக்கிராமத்தில் ஸ்தாபிப்பதால் பெண்களுக்கு நெசவுத் தொழில் ஒரு கைத்தொழிலாக ஏற்பட்டு போதிய வருமானத்தை அளிக்கக் கூயதாக இருக்கும். இந்நிலையத்திற்கு அரசாங்கத்தால் ரூபா 6000/- நிதி ஒதுக்கப்பட்டுள்ளது' இதற்கு கிராம மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை நல்கி சிறந்த முறையில் இந்நிலையத்தை அமைக்க வேண்டும்" எனக் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், தற்போது எமது நாட்டிற்கு பல உணவுப் பொருட்கள் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறதென்றும் முக்கியமாக இதில் செத்தல் மிளகாய்க்கு பெரும் பணம் செலவாகி வருகிறதென்றும் இந்நிலையைப் போக்கவும், போதிய வருமானத்தைப் பெறுவதற்கும் ஒவ்வொரு விவசாயியும் மிளகாய்ச் செய்கையில் ஈடுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார் சாம்பல் தீவு கிராம சபைத் தலைவர் திரு. இ. தங்கராசா பேசுகையில், எமது கிராமத்தில் நிறுவ இருக்கும் நெசவு நிலையத்தை கிராம மக்கள் எல்லோரும் பூரண ஒத்துழைப்புடன் அமைப்பதற்கு உதவி புரியவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் திரு. விஜயரத்தினம், கிராம சேவையாளர் திரு. க. முருகையா கி. ச. உப-தலைவர் திரு. றெ. கோபால் ஆகியோர் உரையாற்றினர்.

## மகாநாட்டிற்கு எம். பி. 11-ந் திகதி செல்வார்

கிளிநொச்சி, வெள்ளி

இம்மாதம் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்கு கிளிநொச்சி எம். பியும் உலகத் தமிழ் மன்ற தலைவருமான திரு. கா. பொ இரத்தினம் ஏப்ரல் 11-ந் திகதி விமானமூலம் செல்வார்.

அம்மகாநாட்டில் திரு. இரத்தினம் 'தமிழ் நாட்டில் இலக்கியத் திறனாய்வின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் பொருள்பற்றியும் 'தமிழ் மக்களின் சிந்தனையில் திறக்குறளின் செல்வாக்கு' என்ற பொருள்பற்றியும் ஆய்வுரை நிகழ்த்துவார்.

உலக தமிழ் மன்றத்தின் நிர்வாகசபைக் கூட்டமும் கோலாலம்பூரில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக திரு. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாத மேடை இல. 1

நாட்டின் பொருளாதாரமும், சுதந்திரமும், பணவருவாயும் இளம் மாணவர்களின் கைத்தொழில் முன்னேற்றத்திலேயே தங்கியிருக்கிறது. எமது நாட்டின் பொருளாதாரத்தையும், நிலைமையும் அறிந்து அதன்படி நடக்கவல்ல இலட்சியமும், கொள்கையும் எமக்குள் இருக்க வேண்டும். நாட்டிலே எவ்வளவோ வாலிபர்கள் வேலையிழந்து அலைகின்றூர்கள். அப்படியிருக்க இன்னும் அரசாங்கப் பதவி மோகம் பிடித்து அலைவோமானுல் நாம் கற்ற கல்வியினுல் அடையும் பயன்பெற்றவராகமாட்டோம். சிலர் அரசாங்க உத்தியோகமே மேலானது என எண்ணியுள்ளனர். அவ்வெண்ணம் மிகவும் தவருனது. அரசாங்க உத்தியோகத்தவர்களும், மற்றைய சக வேலையாட்களும் ''தொழிலாளர்'' என்ற வகையிலேயே வைத்து எண்ணப்படுகின்றனர். நாம் வீணுக செலவழிக்கும்நேரங்களில் வீட்டில் இருந்தபடியே எம்மாலான சிறு கைத்தொழில்களைச் செய்து அதனுல் பெரும் பணம் ஈட்ட முடியும். இதனுல் நாம் எமது நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவும் வாய்ப்பேற்படுகிறது. அரசாங்க உத்தியோகத்தவருள் பெரும்பாலோர் எப்பொழுதும் பதவி விஷயத்திலும் பண விஷயத்திலும் ஒருவருடன் ஒருவர் ஏட்டிக்குப் போட்டியாக உள்ளார்கள். ஆனுல் மற்ற சக ஊழியர்களோ தமது தொழிலிலேயே கண்ணும் கருத்துமாகவும் தமது தொழிலினை அபிருத்தி செய்யவும் முனைந்து நிற்பார்கள். படித்துப்பட்டம் பெற்ருலும் அவ்வறிக்கையைக் கொண்டு எத்தொழிலைச் செய்தும் உழைப்போம் என்னும் நம்பிக்கை ஒவ்வொரு மாணுக்கர்களுக்கும் வேண்டும்.

— அமிர்தகுமாரி தில்லைநாயகம்,
பருத்தித்துறை.

ஃ ஃ ஃ

இன்றைய படித்த மாணவர்களுக்குரிய பிரச்னை, வேலையில்லாத் திண்டாட்டமே. இதை நிவர்த்தி செய்ய ஆலோசனைகள் கையாளப்படுகின்றன. என்ருலும் சிறிய தொகையினரே வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். படித்தமாணவர்கள் செய்யக்கூடிய ஒரேவழி தமது படிப்பு முடிந்ததும் அந்த அறிவைக் கொண்டு ஏதோ ஒரு துறையிலிறங்க வேண்டியதே. உதாரணமாக பல்வேறு ஸ்தாபங்களை உருவாக்கலாம். தனது ஊரிலோ நாட்டிலோ தட்டுப்பாடான பொருள்களை உற்பத்தி செய்து விநியோகஞ் செய்யலாம். விவசாயப் பண்ணைகள் போன்றவற்றை ஆரம்பிக்கலாம். இவற்றை எல்லாம் மாணவர்கள் கல்விகற்கும்போதே மனதிலிருத்த வேண்டும். உத்தியோகம் என்ற ஒரே நோக்கத்தை மனதிலிருத்தாது எதற்கும் தயாராக இருக்கவேண்டும். தனது சொந்த முயற்சியால் பணம் சம்பாதித்து சுதந்திரமாக வாழ வழிவகுப்போமாக.

— கிருஷ்ணர் கோகுலபாலன்,
வட்டுக்கோட்டை.

ஃ ஃ ஃ

மாணவர்கள் ஒவ்வொரு இலட்சியத்தை மனதிற் கொண்டு கல்வி பயின்றுவருவார்களாயின் அவர்களின் எதிர்காலம் சிறப்பாயிருக்கும். கல்லூரிப் படிப்பு முடிந்து வெளியேறும் மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தைச் சிறப்பாக அமைக்க வேண்டுமாயின், உத்தியோகத்தை மாத்திரம் நம்பியிராது விவசாயத்தையும், பண்ணைவளர்ப்பையும், கைத்தொழிலையும் ஆரம்பிக்க வேண்டும். உத்தியோகத்தை நம்பியிருப்பதால் நாம் முன்னேற முடியாது. மாணவர்களாகிய நாம் எதிர்கால வாழ்க்கையைச் சிறப்புடன் கொண்டு செலுத்த வேண்டுமானுல், உத்தியோகத்தை மாத்திரம் நம்பாமல் வேறுதுறைகளில் ஈடுபட்டு முன்னேற வழிபார்க்க வேண்டும். இன்று காடாகவுள்ள காணிகளை அரசாங்கத்திடமிருந்து பெற்று விவசாயம் செய்தால் எதிர்காலம் சிறப்பாக இருக்கும்.

— உ. தர்மலிங்கம்,
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

இன்று நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் குடிபுகுந்து விட்டது. எத்தனையோ பட்டம்பெற்றவர்கள் வேலையின்றி வீதியளக்கும் அவலநிலையடைந்துள்ளதை நாம் கண்ணுல் காண்கிருேம். இதற்கு கல்விமட்டும் போதும், படித்து முடிந்ததும் அரசாங்க உத்தியோகம் பார்க்கலாம் என்று கனவுகள் கண்டு, வேறு வழிகளில் வாழ்க்கையை வளம்படுத்த தம்மைப் பழக்கிக் கொள்ளாததே மூலகாரணமாகும். இதை இன்றைய மாணவருலகம் நன்குணர்ந்து அரசினர் தொழிலைநம்பியிராது வாழ்விலே அறிவுபெற வேண்டும் என படித்து நல்வாழ்வுபெற, உழைக்கப் பழகிக்கொள்ள வேண்டும். மாணவர்கள் கலையுலகை விட்டு வெளியுலகில் காலடியெடுத்து வைக்கும்போதே உழைத்துக்கொள்ள (படிப்பிக்கும் போதே) தொழிற் கல்வியையும் புகுத்தவேண்டும் என்ற முறைமை வந்துள்ளது. இந்த மசோதாவை அரசாங்கம் அமுலில் கொணர்ந்தால் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்குமென்பதில் ஐயமில்லை. இந்நிலைமை ஏற்பட்டால் படித்தவர்கள் கட்டாயம் அரசாங்க உத்தியோகம் தான் பார்க்க வேண்டும் என்ற நிலை மாறி, படித்தோரும் எத்தொழிலையும் செய்நல் கூடும் என்ற புதியநிலை உருவாகும். இதனுல் வீணே கிடக்கும் நிலமெல்லாம் பொன்விளையும் பூமியாக மாறலாம்; நாட்டின் ஒவ்வொரு மக்களும் வாழ்வில் முன்னேறலாம். மாணவருலகம், உத்தியோகத்தையே நம்பியிராமல், எத்தொழிலையும் செய்து எங்கள் நல்வாழ்வை வளம்படுத்த முடியும் என்ற ஒரே கொள்கையுடன் தம்மை நடத்திச் செல்ல வேண்டும். இதனுல் சமூகம் வளரும், நாடு நலன்பெறும், மக்கள் வாழ்க்கை மலரும்.

— ப. மு. முனுஸ்,
நெல்லியடி.




அடுத்த ''மாணவர் மலர்'' 11 - 4 - 1966-ல் வெளிவரும்.

குறிப்பு

விவாதத்தில் கலந்து கொண்டவர்கள், பொதுவாகஅரசாங்க உத்தியோகத்தை எதிர்த்து சுயமுயற்சியில் முன்னேறமுடியுமென்பதை வலியுறுத்திக் கூறியுள்ளனர். இது பற்றிய உங்களின் கருத்துக்களை உடனடியாக எக்கு அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய விலாசம்; விவாதமேடை இல: 1, மாணவர் மலர், ''ஈழநாடு'', த. பெ: 49, யாழ்ப்பாணம்.

# மூளைக்கு வேலை

கடந்த வாரம் இப்பகுதியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையெழுதிய பலர், ஒரு கேள்விக்கு மட்டுமே சரியான விடையை எழுதியிருந்தனர். இதன் விளைவாக கேள்வி மண்டலத்தில் கலந்துகொண்டவர்களில் அதிக மானவர்களின் பெயர்கள் இவ்வாரம் வெளியாகவில்லை. இரண்டு கேள்விகளுக்கும் சரியான விடைகளை எழுதியிருந்தவர்களின் பெயர்கள் மட்டுமே இங்கு வெளியாகிறது. இவர்களுக்கு எனது விசேஷ பாராட்டுதல்கள்.

அதற்கு முன்னர் சரியான விடைகளைக் கவனிப்போம்.

முதலாவது கேள்வியின் விடை:- 15-11-1505.
இரண்டாம் கேள்வியின் விடை: 22 நாட்கள்.
பின்வருபவர்கள் இரண்டு கேள்விகளுக்கு சரியான விடைகளை எழுதியிருந்தனர்.

மகேசன் தர்மலிங்கம், யாழ்ப்பாணம்; இந்திரா கணபதிப்பிள்ளை, காரைநகர்; கு. பற்குணராசா, சாவகச்சேரி; எம். புஷ்பா, கரவெட்டி வடக்கு; து. மோகனகுமாரி, அரியாலை; ரி. லலிதா, யாழ்ப்பாணம்; சு. இ. சிவகுமார், தும்பளை, பருத்தித்துறை; மனேரஞ்சனி வாமதேவன், கந்தர்மடம்; ஆ. கிருஷ்ணமூர்த்தி, ஏழாலை மேற்கு; பொ. அருந்தவநாதன், அளவெட்டி வடக்கு; ஏ. பி. சந்திரநாதன், மீசாலை; எஸ். சண்முகராசா, அளுத்காமம்; சி சுதந்தரராசா, யாழ்ப்பாணம்; மு. செபஸ்தியாம்பிள்ளை, பாஷையூர்; யா. மேரியசிந்தா, வட்டக்கச்சி; க. நாகேந்திரன், அரியாலை; த. புஷ்பராணி, வே. விநாயகமூர்த்தி, வ. கனகசிங்கம், செ. சிவராஜா, வி. சிதம்பரலிங்கம், ஆர். நாகேஸ்வரி, கே. பாறுபதிதேவி, பி. தம்பிஐயா எழுதுமட்டுவாள்; பொ. தங்கராசா, மிருசுவில்; செல்வரத்தினம் மகாலிங்கம், திருநெல்வேலி.

## கேள்வி மண்டலம்

இதோ இவ்வாரக் கேள்விகள். (1) முதலாவது கேள்வி: இந்தியாவின் இரும்பு மனிதர் என்று புகழ் பெற்றவர் யார்? (2) இரண்டாவது கேள்வி: யுதாண்டுக்கு முன்னர் ஐ. நா. வின் பொதுக்காரியதரிசியாகவிருந்தவர் யார்?

இரு கேள்விகளுக்குரிய விடைகளை எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய விலாசம்; 'மாணவர் மலர்', 'ஈழநாடு' த. பெ. 49, யாழ்ப்பாணம்.

— சாந்தா

விஞ்ஞானப்பெரியார்கள்

## சாமுவேல் பின்லி ப்றிஸ் மோர்ஸ்

— சி. சண்முகலிங்கம் —

நாம் தந்தியின் மூலம் உலகின் பல நாடுகளுக்கும், இலங்கையின் பலபாகங்களுக்கும் செய்திகளை அனுப்புகின்ருேம். இப்படியாக அவசரச் செய்திகளை உடனறியத் தந்தி உதவி புரிகின்றது. இந்தத் தந்தித் தொடர்பை பல நாடுகளுக்கும், பல ஊர்களின் மத்தியிலும் ஏற்படுத்தியவர்தான் சாமுவேல் பின்லி ப்றிஸ் மோர்ஸ் என்ற பெரியார்.

இவர் அமெரிக்காவிலுள்ள சாளஸ் நகரில் 1791-ம் ஆண்டில் பிறந்தார். அக்காலத்திற் புகையிரதம், குதிரை வண்டி முதலியனவே செய்திகள்கொண்டு செல்ல உதவும் வாகனமாக பாவிக்கப்பட்டுவந்தன. இதனுல் செய்திகளை மக்கள் உடனுக்குடன் அறிய முடியாதநிலையிருந்து வந்

(3-ம் கலம் பார்க்க)

(5-ம் கலம் தொடர்ச்சி)

தது. இந்நிலை மாறவேண்டும் என்று எண்ணிய மோர்ஸ் இதுபற்றிப் பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வந்தார். 1832-ம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் பல்கலைக்கழகத்திற் பேராசிரியராகக் கடமையாற்றிய மோர்ஸ் எழுத்துகளுக்கு சுருக்க ஒலிக்குறிகளினுல் ஒரு அமைப்புத் திட்டத்தை அமைத்தார். இதனைக்கொண்டு செய்திகள் அனுப்பிவந்தார். அவரின் அரிய முயற்சி 1854-ம் ஆண்டு மே மாதம் 24-ம் திகதி வெற்றியீட்டியது.

இவரின் விடாமுயற்சியின் பயனுக எல்லாவிடங்களிலும் செய்திகள் விரைவில் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டது இப்படியாக அரும்பணி புரிந்த சாமுவேல் பின்லிப்றீஸ் மோர்ஸ் 1872ம் ஆண்டில் காலமானுர்.


# தரமான மொறட்டுவை வீட்டுத் தளவாடங்கள்

தரமான தளவாடங்களுக்கும், நியாயமான விலைக்கும்
எம். எஸ். பெர்னுண்டோ அன் கொம்பனி
பிரசித்திபெற்றது.

இந்தப்பருவத்தில் விற்பனையாகும் பொருட்களில் ஒன்றுதான் கீழே காட்டப்பட்டுள்ளது.

முதல்தர பர்மா தேக்கினுலான ஸ்பிரிங் கட்டில் ரூபா 245-00.

இரண்டாந்தர பர்மா தேக்கினுலான ஸெட்டின்ஸ்பிரிங்கட்டில் ரூபா 175-00.

(முதல்தர ஸ்பிரிங் இணைக்கப்பட்டது)



விருந்தை முதல் சமையலறை வரைக்கும் உங்கள் சகல வீட்டுத் தேவைக்குமான தளவாடங்களும் எங்களிடம்உண்டு. தரம், வேலைப்பாடு, விலை ஆகியவற்றில் உத்தரவாதம்.

எம். எஸ். பெர்னுண்டோ அன் கம்பெனி
110, காலி வீதி, மொறட்டுவை.

கிளைகள்:- இல. 4, இண்டிபெத்த, மொறட்டுவை.
இல. 32, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்



## உயர்தரக் கல்வி

மிகத்திறமையான விவேக மீட்டல் பாடங்கள், தமிழ், சமஸ்கிருதம், அரசியல், பொருளாதாரம், புவியியல், இலங்கைச் சரித்திரம், ஐரோப்பிய சரித்திரம், இந்திய சரித்திரம் ஆகியவற்றில் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொன்றிற்கும் ரூ. 12/-

ஐக்கிய கலாசாலை,
நெல்லியடி, :: கரவெட்டி. B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம்

மேற்படி சங்கத்தில் கண்டிப் புகையிலை சில்லறையாகவும் பெருந்தொகையாகவும் ஏப்ரல் 7ம், 9ம், 11ம் திகதிகளில் ஏலவிற்பனவு செய்யப்படும். புகையிலை கொள்வனவுசெய்ய விரும்புவோர் மேற்கூறப்பட்ட திகதிகளில் சங்கத்திற்கு சமூகம் தருக.

யாழ்ப்பாணம்.

30-3-66 2089


## புதிய ஜே. பி.

யாழ்ப்பாணம், ஞாயிறு இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த திரு. கே. கந்தசாமி சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட நீதிபதி திரு. என். எம். ஜே. இராஜேந்திரம் முன்னிலையில் இவர் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

தற்பொழுது திரு. கந்தசாமி யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்தில் உதவி ஆயணாளராக கடமையாற்றி வருகின்றார்.


REGAL—JAFFNA
NOW SHOWING!
PRIZE WINNER AT FRENCH FILM FESTIVAL !
THE SKY ABOVE THF MUD BELOW
( in Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
நீதிக்குப் பின் பாசம்
கலரி 50 சதம்.
4-45க்கு மட்டும்
The Dark Eyes of London

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ் ஆர். - விஜயகுமாரி
நடித்த
பூம்புகார்





## கொழும்பு

### ஞாயிறு 3 - 4 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை ,8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 ஆராதனை, 6-45 நேயர்கடிதங்கள், 7-30 மன்றநாடகவிழா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு, 10-00 மாதர் கேட்டவை.

## வேலைவாய்ப்பு வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் வேலையற்றிருப்போருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு தேசிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும். தீர்மானம் யாழ மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச்சேவைக் கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வேலைவாய்ப்புக் கொடுப்பதற்காக தேசிய அரசாங்கம் தற்போது எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பாராட்டி நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்திலேயே மேற்கண்டவாறு கேட்கப்பட்டுள்ளது.

இன, மத, மொழிகளால் வேறுபட்டிருந்தவர்களை ஒற்றுமைப்படுத்தி நாட்டில் ஐக்கியத்தை வளர்க்கும் நோக்கத்துடன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கும்மகாநாயக்க தேரோவை வரவேற்பதென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# "என்னைக் கீழே விழுத்திவிட்டு தாலிக்கொடியை அறுத்தார்"

## மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பெண்சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு காரைநகர் கிழக்கைச் சேர்ந்த பரிமளம் இராசையா என்பவரின் தாலிக்கொடியை அவரது கழுத்திலிருந்து பிடுங்கி எடுத்ததாக அவரது மூத்த சகோதரியின் கணவரான நவரத்தினம் என்பவர் மீது ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்குஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வல்லியம்மாவும் அவரது மகளான பரிமளமும் அவர்களுக்குச் சொந்தமானவயலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இரவு 7 மணியளவில் பரிமளத்தின் மூத்த சகோதரியின் கணவரான நவரத்தினம் அவர்களைத்தாக்கி பரிமளத்தின் தாலிக்கொடியை பிடுங்கி எடுத்ததாக குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

பரிமளம் இராசையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எனது தாயாரும் நானும் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது எனது சகோதரியின் கணவர் நவரத்தினம் எனது தாயாரைக் கூப்பிட்டார். தாயார் அவரிடம் சென்ற சிறிது நேரத்தில் 'ஐயோ' என்று எனது தாயாரின் அழுகைக் குரல் கேட்டது. நான் உடனே அவ்விடத்திற்குச் சென்றேன். அப்பொழுது எனது தாயாரை அடித்து ஒரு பக்கத்தில் எதிரி தள்ளி வீழ்த்தியிருந்தார். நான் உடனே 'ஏன் இப்படிச் செய்தாய்? என அவரிடம் கேட்ட போது எதிரி எனது தலைமயிரைப் பிடித்து என்னைக் கீழே விழுத்தி விட்டு எனது தாலிக்கொடியை அறுத்தார். நான் கூக்குரலிடவே எதிரி ஓடிவிட்டார். எனது கூக்குரலைக் கேட்டு ஓடிவந்த எஸ். கதிரமலை என்பவரிடம் நடந்தவற்றைக் கூறினேன். அப்பொழுது அவர், தான் இந்த விஷயத்தில் தலையிடமுடியாதென்றும் தான் பொலிஸாருக்கு அறிவிப்பதாகவும் கூறினார்.

கதிரமலை சாட்சியமளித்தபின் வழக்கு இம்மாதம் 28-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

புரக்டர் இராசையாவின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு. ரீ கணேசலிங்கம் எதிரிசார்பில் ஆஜரானார். ஊர்காவற்றுறை பொலிசாரின் உதவியுடன் திரு.ஆர். விசுவநாதன் வழக்கை நடாத்தினர்.

(ந. நி.)

## 'கொமற்' கழகத்திற்கு வெற்றி

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறை கொமற் விளையாட்டுக் கழகத்திற்கும், வதிரி பொம்பேஸ் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் கொமற் விளையாட்டுக்கழகம் 2 ஆட்டங்களிலும் முறையே 15:11, 16:14 புள்ளிகளைப்பெற்று வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு எஸ் என். ஆறுமுகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

அல்வை வாலிபர் கழகத்திற்கும், இளங்கோ விளையாட்டுக்கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற மற்றுமொரு கரபந்தாட்டப்போட்டியில் அல்வை வாலிபர் கழகம் இரு ஆட்டங்களிலும் முறையே 15:12, 15:6 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது. மேற்படி கழகம் உடுவில் ஸ்ராஸ், அல்வை மனோகரா ஆகிய இரு கழகங்களோடு மோதி தோல்வியடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இப் போட்டிகள் யாவும் அல்வை கழக மைதானத்தில் நடைபெற்றது.

## புதுவருடப் போட்டி

வல்வெட்டித்துறை, சனி

எதிர்வரும் புதுவருடதினத்தன்று வழமைபோல் பருத்தித்துறைப் பொலிசாரால் நடத்தப்படவிருக்கும் விளையாட்டுப்போட்டிகளில் கைப்பந்தாட்டம், சைக்கிள் போட்டி, ஓட்டப் போட்டி முதலிய வேறும் பல நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

வெற்றிபெற்ற வீரர்களுக்குப் பரிசளிப்பு விழாவும் நடைபெறும்.

## படிப்பின்மையால் பணம் விரயமாகிறது!

சென்னை, ஏப். 2

நாதஸ்வரம், தவில் வாத்தியங்களில் இரு வருட ஆராய்ச்சிப் படிப்பு சென்னை கர்நாடக சங்கீதக் கல்லூரியில் 1961-ல் ஆரம்பிக்கப்பட்டது. அதில் 18 பேருக்கு பயிற்சி அளிக்க வசதி செய்யப்பட்டது. அவர்களுக்குமாதம் 230 உபகாரச் சம்பளம் கொடுக்கவும்ஏற்பாடு செய்யப்பட்டது. 1961-ல் 11 பேர் சேர்த்து கொள்ளப்பட்டனர். இவர்களில் மூவர் பாதியில் நிறுத்திவிட்டனர். 1963-ம் ஆண்டு ஏப்ரலில் நடந்த இறுதிப் பரீட்சையில் பாகி 8 பேரும் தேறமல் போய் விட்டனர்.

ஆராய்ச்சிப்படிப்பு போதிக்கும் ஆசிரியர்கள் இரண்டு கோஷ்டியினருக்கு உபகாரச் சம்பளம் ஆகியவற்றிற்காக ரூபா 323,200 செலவாகியிருக்கிறதாம்!

## ஆஸ்பத்திரி சம்பவம்

### விசாரணை செய்ய உத்தரவு

திருமலை, சனி

திருகோணமலை ஆஸ்பத்திரி வளவினுள் கார்கள் நுழைவதை ஆஸ்பத்திரி அதிகாரிகள் தடைசெய்திருந்தனர்.

இதன் காரணமாக அண்மையில் ஒருநாள் கத்திக் குத்துக் காயங்களுடன் கொண்டுவரப்பட்ட இளம் பெண்ணை ஆஸ்பத்திரி வெளிவாசலிலிருந்து அவசர சத்திரசிகிச்சை அறைக்கு சுமார் நூறுயார் தூரம் இரத்தம்சொட்டச்சொட்ட தூக்கிக் கொண்டு சென்ற சம்பவம்பற்றி திருமலை மாவட்ட இணைப்புக்குழு தெரிவித்த குற்றச்சாட்டு பற்றி பூரண விசாரணை நடத்துமாறு சுகாதார இலாகா உத்தரவிட்டுள்ளது.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

''வில்லியேர்ஸ்'' மார்க் 10, 12, 20 மொடல், விவசாய யந்திரங்கட்கு 'பிஸ்றன்', 'றிங்ஸ்', 'பெயறிங்ஸ்' எம்மிடம் இடைக்கும் ராமகிருஷ்ணா ஸ், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். போன்: 7179. 7

விற்பனைக்கு செம்மணி றோட்டுக்கரையில் 25 பரப்பு வயல் இருக்கிறது. விபரத்திற்கு அப்பாக்குட்டி, 159/1 டெம்பிள் றோட், நல்லூர். 4

### SALES

2 Sri Speedtwin. One owney in show room condition. Very low mileage. 49/1, Oldpark road, Jaffna. 6

### தேவை

தேர்ச்சியுள்ள நெசவுத் தொழிலாளர்களும் ஆசிரியைகளும் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். காலை 10-11 மணிக்கிடையில் 246, உள்ளூர் உடை உற்பத்தித் தொழில் ஸ்தாபனம், காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். 8

### குத்தகைக்கு

3—4 ஏக்கர் வெறும் நிலம், நீடிய குத்தகைக்கு. நகரசபை எல்லை அருகாமையில் - ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், நல்லூர் அல்லது அரியாலை, வீ. கே. பரமநாயகம், 10, அம்மன் வீதி, கந்தர்மடம். 2240

### வாடகைக்கு

பட்டணத்துக்குள், வீடொன்று வாடகைக்கு, ரூபா 75/- உள்ளாக. வீ. கே. பரமநாயகம், 10, அம்மன் வீதி, கந்தர்மடம். 2241

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.



இப்பொழுது நடைபெறுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.

சபையர் (வெள்ளவத்தை); விஜிதா (அட்டன்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)

முத்துராமன், மனோகர், சந்திரகாந்தா, ராஜஸ்ரீ, பேபி ஷகிலா
நடிக்கும்
மொடேர்ன் தியேட்டர்ஸின்
அம்மா எங்கே?
விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
கடைசி வாரம்
சர்வர் சுந்தரம்



" லேடன் " LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
● ரெ சேட்
● ற பிளவுஸ்
● பேபி வெஷ்ட்
● கால்மேஸ்
(Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

32A, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் சென்றபின் இந்திரா ரஷ்யா பயணமானர்

நியுயோர்க், ஏப். 2

**இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி தமது அமெரிக்க சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்க படை விமானத்தில் இன்றுலண்டன் போய்ச் சேர்ந்தார். லண்டனில் பிரதமர் வில்சனைச் சந்தித்துப் பேசியபின் மாஸ்கோ பயணமானர்.**

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனுக்கும் தமக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக நடைபெற்றதாக ஸ்ரீமதி இந்திரா லண்டன் செல்வதற்கு முன்னதாக நியூயோர்க் விமானநிலயத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

நிபந்தனையற்ற முறையில் பாரதத்துக்கு அமெரிக்க உதவிசெய்ய விரும்புவதாக ஜனாதிபதி ஜோன்ஸன் தெரிவித்திருந்ததாகவும் இந்தியப் பிரதமர் மேலும் சொன்னர்.

பாகிஸ்தானுக்கும் பாரதத்துக்குமிடையே ஏற்பட்ட டாஷ்கண்ட் ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கிறதென்று ஜோன்ஸன் தெரிவித்திருந்ததாகவும் ஸ்ரீமதி இந்திரா நிருபர்களிடம் கூறினர்.

அமெரிக்காவின் தமது சுற்றுப்பயணம் அமெரிக்க மக்களுக்கு என்றுமில்லாத ஒரு அன்பையும், மதிப்பையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் ஸ்ரீமதி காந்தி குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் பிரதமர் ஹரோல்ட் வில்சனை ஸ்ரீமதி இந்திராகாந்தி இன்று சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

சோவியத் பிரதமர் கோசிஜினுடன் ஸ்ரீமதி இந்திரா பேச்சுவார்த்தை நடத்துவார். அநேகமாகப் பேச்சுவார்த்தையில் உலக விவகாரங்கள் குறித்தும், இந்தியாவின் நெருக்கடியான உணவுநிலைமை பற்றியும், டாஷ்கண்ட் ஒப்பந்தத்தைப் பற்றியும் இருநாட்டுத் தலைவர்களும் பேசிக்கொள்வாரிளென அறியப்படுகிறது.

## யாழ். நகர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகள் வைத்திருப்பதாகவும், இதுபற்றி ஸ்தலஸ்தாபன அமைச்சருடன் கலந்தாலோசனை செய்ய விருப்பதாகவும் மேயர் தெரிவித்தார்.

### பஸ் நிலயம்

பழைய பஸ் நிலயத்தில் புதிய பஸ் நிலயம் அமைக்கப்படுவதற்கு தாம் விரைவில் நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் மேயர் தெரிவித்தார்.

கட்டிடங்கள் கட்டுவதற்கான மாதிரிப்படம் கட்டிடக்கலைஞர்களால் வரையவேண்டுமென்றிருந்த உத்தரவு நீக்கப்பட்டுவிட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி இப்படங்களைப் பார்த்து இனி அனுமதியளிப்பாரென்றும் இரு வாரங்களுக்குள் இனிக் கட்டடங்களுக்கான மாதிரிப் படங்கள் பரிசிலனை செய்யப்பட்டுவிடுமென்றும் மேயர் கூறினர்.

### சாக்கடை

யாழ்ப்பாண நகரில், கொழும்பில் போன்ற வீடுகள் தோறும் சாக்கடைக் கழிநீர் குழாய்மூலம் அப்புறப்படுத்தும் திட்டமொன்றைக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திடமிருந்து உதவியும் கடனும் பெறும் பொருட்டு ஸ்தலஸ்தாபன மந்திரியின் உதவியைக் கோரவிருப்பதாகவும் மேயர் துரையப்பா தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் மூலம் யாழ்ப்பாண விளையாட்டு அரங்கை பூர்த்திசெய்யவும் நீச்சல் தடாகம் அமைக்கவும் பண உதவிபெற தாம் முயற்சி செய்யப்போவதாகவும் அவர் சொன்னர்.

நகரின் குழாய்விநியோகத் திட்டத்தின் 2-ம் கட்டத்தை விரைவில்கொண்டு வரவிருப்பதாகவும் மேயர் கூறினர்.

# வில்சன் வெற்றி

## ரஷ்யா வரவேற்பு

மாஸ்கோ, ஏப். 2

பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் ஹரோல்ட் வில்சனுக்குக் கிடைத்திருக்கும் வெற்றியை சோவியத் தலைவர்கள் வரவேற்றதாக மாஸ்கோ அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வில்சனின் அரசாங்கம் இடதுசாரிக் கட்சிக் கொள்கைகளையே கடைப்பிடிக்க வேண்டுமென்று ரஷ்யர்கள் பத்திரிகைகள் மூலம் வற்புறுத்துவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

(பி.டி.ஐ.)

# 'இந்திய எல்லைக்கு பாதுகாப்பு அவசியம்'

## மந்திரி சவான்

புதுடில்லி, ஏப். 2

தமது நாட்டின் எல்லைக்கு இன்னமும் பாதுகாப்பு வேண்டுமென்றும், எந்த நேரத்தில் எப்படியான தாக்குதல்களையும் சமாளிப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டுமென்றும் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சவான் தெரிவித்துள்ளார்.

இந்திய விமானப்படைத் தினத்தையொட்டி திரு. சவான் நிகழ்த்திய வானெலிப் பேச்சிலேயே மேற்கண்டவாறு சொன்னர்.

விமானப்படை வானத்தைப் பாதுகாப்பது போல ராணுவத்திற்கும் கைகொடுத்துஉதவிசெய்வதற்கு எந்த நேரத்திலும் தயாராக இருக்கவேண்டும் என்றும் அவர் கூறினர்

# மாயமாக மறைந்த பெண்

கொழும்பு, சனி

கண்டிப் பொலிசாரின் பாதுகாப்பிலிருந்த வித்தானகே எதிரி சிங்கி என்றபதினெட்டு வயது பெண் மாயமாக மறைந்ததையிட்டு அப்பெண்ணை தேடுவதில் பொலிசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் பஸ்ஸில் பிரயாணம் செய்த இப்பெண்ணின் போக்கு பஸ் கண்டக்டருக்கு சந்தேகத்தை கொடுத்ததன் காரணமாக அவர் அப்பெண்ணை நீர்கொழும்பு பொலிசாரிடம் ஒப்படைத்தார்.

# நகரசபைகளின் வருடாந்த மகாநாடு

## சிலாபத்தில் இன்று ஆரம்பம்

கொழும்பு, சனி

இலங்கை நகரசபைகளின் வருடாந்த மகாநாடு நாளை (ஞாயிற்றுக்கிழமை) சிலாபத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. இரண்டு தினங்கள் நடைபெற இருக்கும் இந்த மகாநாட்டை ஸ்தலஸ்தாபன மந்திரி செனட்டர் திருச்செல்வம் ஆரம்பித்துவைப்பார்.

இம்மகாநாட்டில் பிரதம பார்வையாளர்களாக நிதி மந்திரி திரு. வன்னிநாயக்காவும், உபசபாநாயகரும் சிலாபத் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவருமான ஷெர்லிகொரியாவும் கலந்துகொள்வார்கள். மகாநாட்டின் இரண்டாம்நாள்நிகழ்ச்சிகளை ஸ்தலஸ்தாபன உதவி மந்திரி திரு. ஆர்.பிரேமதாசா ஆரம்பித்து வைப்பார்.

நகரசபைகள் சம்பந்தப்பட்ட பல தீர்மானங்கள் இந்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக அறியப்படுகின்றது இப்போது நகரசபைகளின் நிர்வாகபரிபாலனம் மூன்று ஆண்டுகளாக இருப்பதை ஐந்துஆண்டுகளாக நீடிக்கவேண்டும் என்று ஸ்தலஸ்தாபன மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் தீர்மானங்களில் ஒன்ருகும்.

பிரதேசசபைகள் சம்பந்தமானமசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக நகரசபைகள் தம் கருத்துக்களை தெரிவிப்பதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென்றுகேட்டுக்கொள்ளும் இன்னுமொரு தீர்மானமும் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

# சிறுவனின் பிரேதம் கடலில் கண்டுபிடிக்கப்பட்டது

மாவிட்டபுரம், சனி

நேற்று முன்தினம் அதிகாலை நான்கு மணியளவில் ஆழ்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ஒரு கட்டுமரத்துடன் இனம் தெரியாத ஒரு இயந்திரப்படகு மோதியதால் கட்டுமரத்திலிருந்துகடலில்வீசப்பட்ட மயிலிட்டி பலாலியைச் சேர்ந்த 11 வயதுள்ள மைக்கல் நிவிலிஞ என்ற சிறுவனின் பிரேதம் இன்று பகல் 2 மணிக்கு கண்டெடுக்கப்பட்டது.

''இலங்கேஸ்வரி'' என்ற இயந்திரப்படகில் தொழிலுக்குச் சென்ற மயிலிட்டி மீனவர்கள் மயிலிட்டியிலிருந்து 2 மைல் தூரத்தில் (கடலில்) இச் சிறுவனின் பிரேதம் மிதந்துவரக்கண்டனர் என்றும் பின்னர் பிரேதத்தை இயந்திரப்படகில் கரைக்குக் கொண்டுவந்து பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர் என்றும்கூறப்பட்டது. சிறுவனின் முகம் சிதைந்த நிலையில் காணப்பட்ட பொழுதிலும் தலைப்பாகை அவிழாமலும் உடுப்புகள் மாருமலும் இருந்தன.

பிரேதம்காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டதும் மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபான மரணவிசாரணை நடத்தினர்.

சம்பவம்நிகழ்ந்தபொழுது சிறுவனுடன் கட்டுமரத்திலிருந்த சிமியோன் அந்தோனிப்பிள்ளை, மற்றும் சிறுவனின் தாயார் மேரி மற்றலடா, சின்னையா கைலாசபிள்ளை ஆகியோர் சாட்சியமளித்தனர். காங்கேசன்துறை பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. இராசநாயகம் சாட்சிகளை ஆஜர் செய்தார். சிறுவனின் பிரேத பரிசோதனையை நடத்துமாறு காங்கேசன்துறை வைத்திய அதிபருக்கு உத்தரவிட்டு மேல்விசாரணைகளை இம் மாதம் 6-ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். பிரேத பரிசோதனை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இதுசம்பந்தமாக சந்தேகத்தின்மீது கைப்பற்றப்பட்ட மயிலிட்டியைச் சேர்ந்த இயந்திர மீன்பிடிப் படகை பொலிசார் உரியவர்களிடம் திருப்பி ஒப்படைத்துள்ளனர்.

# பீங்கான் தொழிற்சாலை

கொழும்பு, சனி

அரசாங்கப் பீங்கான் தொழிற்சாலை பிளியந்தலையில் விரைவில் தொழில்படவிருக்கின்றது.

இத் தொழிற்சாலைக்கான யந்திர சாதனங்கள் எல்லாம் இணைக்கப்பட்டுவிட்டதாகவும் பரீட்சார்த்தவேலைகள் விரைவில் ஆரம்பமாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## விற்பனைக்கு

மொரிஸ் மைனர்! வெளிநாடு செல்லவிருக்கும்யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளரின் சொந்தப்பாவிப்பிலிருக்கும் திறமையான நிலையிலுள்ள கார். சுன்னாகம் [illegible] ''மணிவிலா'' வில் பார்வையிடலாம். 3


# அரசாங்க லிகிதர்சங்கத்தின் புதிய காரியாலயம்

கொழும்பு, சனி

அரசாங்க லிகிதர் சங்கத்தின் 6 மாடிகளைக் கொண்ட புதிய காரியாலய கட்டிடம் இன்று சம்பிரதாயப் பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. பிரபல தொழிற்சங்கவாதிகள் பலர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டார்கள். கொழும்பு பார்ஸன் வீதியில் இருக்கும் இக்கட்டிடத்தில் சில பகுதிகளை சிலகாலத்துக்கு மக்கள் வங்கிக்கு வாடகைக்குவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற திறப்புவிழாவில் பிரமாண்டமான குத்துவிளக்கொன்று பிரமுகர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. அங்கு பேசிய சங்க உத்தியோகத்தர் ஒருவர் மண்டபத்தை மேலும் விஸ்தரிக்க உத்தேசித்திருப்பதாயும் நிதி பற்ருக்குறை காரணமாக சில பகுதிகளை வாடகைக்கு விட முடிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்'

# பங்குனி உத்தர திருவிழா

கொழும்பு, சனி

கொழும்பு கொம்பெனித் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் திங்கட்கிழமை பங்குனி உத்தரத் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. பகலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாலையில் வாத்தியகோஷ்டி இசை, திருமதி இராஜேஸ்வரி தெட்சணமூர்த்தியின் இசைக்கச்சேரி திரு. சி. எஸ். எஸ். மணிபாகதரின் கதாப்பிரசங்கம் என்பனவும் இடம்பெறும்

# 24மணி நேரத்துக்கு ஒத்திவைத்துள்ளார்

கொழும்பு, சனி

நாளை (ஞாயிறு) காலை 4 மணிக்கு மேற்கொள்ளவிருந்த தமதுநீச்சல்முயற்சியை இந்திய நீச்சல் வீரர் பாரிஸ்டர் மிகிர்சென் இன்னும் 24 மணிநேரத்துக்குஒத்திவைத்துள்ளார்.

32 வயதான திரு மிகிர்சென் தலைமன்னரிலிருந்து பாக் ஜலசந்தியை நீந்திக் கடக்க உறுதிகொண்டுள்ளார்.

# 'மாணவர்க்கு கல்வி முக்கியமானது'

வல்வெட்டித்துறை, சனி

'மாணவர்களின் சிறந்த வாழ்க்கைக்குக் கல்வி மிக முக்கியமானதாகும். நமது பாடசாலை வளர்ச்சிக்காக வருடா வருடம் பல நிகழ்ச்சிகளை நடாத்திவந்திருக்கிறேம். ஆனல் இவ்வருடம் பெற்ருர்தின விழாவை ஆடம்பரமற்றதாகநடாத்த முற்பட்டிருக்கிறேம். இதனல் மிச்சப்படுத்தப்படும் பணத்தைக்கொண்டு பாடசாலைக்கு மின்சார வெளிச்சத்தை ஏற்படுத்தலாமென எண்ணியுள்ளோம்' என்று உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் திரு. எஸ். எஸ். செல்வத்துரை அப்பாடசாலையின் பெற்ருர்தின விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், வருகிற வருடம் பாடசாலையில் விஞ்ஞானக் கலைக்காட்சிகளின் சிறப்பை வெகு விமரிசையாக நடத்தி மாணவர்களுக்குக் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்குத் தீர்மானித்திருக்கிறேம்.

சாரண மாணவர்களால் ஆபத்துக்காலங்களில் நடைபெறும் சமயோசித உதவிகளை விளக்கமாக நடித்துக் காண்பிக்கப்பட்டது. மற்றும் பேச்சுப் போட்டிகளும், சங்கீதப் போட்டிகளும், அரிச்சந்திரன், கட்டபொம்மன் நாடகங்களும் இடம்பெற்றன.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். எஸ். செல்வத்துரை, உபதலைவர் திருவாளர்கள் எஸ். ஆர். நவரத்தினம், வி. சின்னத்தம்பி, இணைக்காரியதரிசிகள் திருவாளர்கள் என். துரைராசா, எம். இராசநாயகம், பொருளாளர் பண்டிதர் எஸ். வேலுப்பிள்ளை.

# இந்தோனேஷியா பற்றி சுகர்ணோ

சிங்கப்பூர், ஏப்ரல் 2

இந்தோனேஷியா வளர்ந்துவரும் உலகநாடுகளின் பிரதான நாடாகவும், மறு தேசங்களுக்கு உதவி செய்யும் நாடாகவும் திகழும் என ஜனாதிபதி சுகர்ணோ கருத்து தெரிவித்துள்ளதாக ஜாகர்த்தா வானெலி அறிவித்துள்ளது.

# நியூயோர்க் பற்றி இந்திரா

நியுயோர்க், ஏப். 2

''நியுயோர்க்கில் தான் தங்கிய நாட்கள் மிகவும் நன்மை பயக்கக்கூடியதாயும், சிறந்ததாகவும் இருந்தது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலக்கையில் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி [illegible]-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org